| | |
|---|---|
| **06** | **கணக்கீடு**<br>அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்<br>தரம் 12<br>**தனிவியாபாரம்** |

# பகுதி 1

## <u>தனி வியாபாரம்</u>

### வினாக்கள்

01) ஒரு வணிகத்தின் 2020.03.31 அன்று ஏற்பட்ட வெள்ளத்தினால் களஞ்சியத்தில் இருந்த பொருட்கள் அழிவடைந்தது. 31.03.2019 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல் வழங்கப்பட்டுள்ளன.

| | ரூ000 |
|---|---|
| விற்பனை | 15000 |
| கொள்வனவு | 6000 |
| விற்பனைத்திருப்பம் | 750 |
| விற்பனைக்கிரயம் | 8000 |

இருப்புக்கள் அழிவில் 80% ஐச்செலுத்த காப்புறுதி நிறுவனம் ஒப்புக்கொண்டது. இது தொடர்பாக வணிகத்துக்க தேறிய நட்டம் ரூ.150 000. ஆழிவடைந்த பொருட்களின் கிரயம் யாது?

1. ரூ.150000
2. ரூ.250000
3. ரூ.750000
4. ரூ.800000
5. ரூ.1000000

02) ஒரு வணிகத்தின் ஐயக்கடன் தொடர்பாக தகவல்கள் பின்வருமாறு:

| | 2020.12.31 | 2019.12.31 |
|---|---|---|
| ஐயக்கடனுக்கான ஒதுக்கீடு | 70 000 | 50 000 |

- 2020.06.10 இல் ரூபா.80 000 கடன்பட்டோர் தருப்பி செலுத்த முடியாது என தெரிய வந்தது.
- அறவிடமுடியாக்கடன் மற்றும் ஐயக்கடனை ஒரே கணக்கின் மூலம் மேற்கொள்ளும் போது, வருமானக்கூற்றின் விநியோகச்செலவின் கீழ் காட்டப்படும் தொகை யாது?

1. ரூ.50000
2. ரூ.70000
3. ரூ.80000
4. ரூ.100000
5. ரூ.120000

BUSINESS & COMMERCE BRANCH

03) 2020 ஜனவரி மாதத்தில் ஒரு வணிகத்தால் வழங்கப்பட்ட தேறிய சம்பளம் ரூபா.135 000 ஊழியரின் EPF பங்களிப்பு 10% மற்றும் வணிகத்தின் பங்களிப்பு 15% ஆகும்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

1. வணிகத்தின் மொத்த சம்பளம் யாது?
2. ஜனவரி 2020 ற்கான வணிகத்தின் EPF,ETF செலவுகளை தனித்தனியாக குறிப்பிடுக.
   EPF :
   ETF :
3. ஜனவரி இறுதியில் காணப்படுகின்ற பொறுப்புக்களை பட்டியல் இடுக.
   (மாதத்தில் EPF மற்றும் ETF செலவுகள் அடுத்த மாதத்தில் செலுத்தப்படும்.)
   செலுத்த வேண்டிய EPF :
   செலுத்த வேண்டிய ETF :

04) பிரியன் வணிகத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான தகவல்கள் உமக்கு தரப்படுகின்றன.

| | 2019.04.01 | 2020.04.01 |
|---|---|---|
| முற்பண வாடகை | 2000 | ? |
| செலுத்த வேண்டிய மின்சாரம் | 2000 | 1500 |
| முற்பண காப்புறுதி | 1000 | 500 |
| அட்டுறு தொலைபேசிக் கட்டணம் | 200 | - |
| முற்பணமாக செலுத்திய தொலைபேசிக் கட்டணம் | - | 100 |

2020.03.31 அன்று முடிவடையும் ஆண்டுக்கு தொலைபேசிக்கட்டணம் ரூ.9700 மற்றும் வாடகை வருமானம் ரூ.15 000 ஆகும்.

வருடத்தில் ஏற்பட்ட செலவுகள் - மின்சாரம் ரூ.8000
- காப்புறுதி ரூ.12000
- தொலைபேசி ரூ.?

வருட வாடகை வருமானம் ரூ.14000

1. 2020.03.31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான மின்சார மற்றும் காப்புறுதி செலவுகள் என்ன?

| மின்சாரக்கட்டணம் (ரூ) | காப்புறுதிக்கட்டணம்(ரூ) |
|---|---|
| 1. 4500 | 1500 |
| 2. 4500 | 12500 |
| 3. 7500 | 12500 |
| 4. 7500 | 13500 |
| 5. 8500 | 13500 |

2. 2022.03.31 க்கு முன்னர் பெறப்பட்ட காசாக செலுத்தப்பட்ட தொலைபேசி கட்டணம் மற்றும் வாடகை வருமானம் என்ன?

| செலுத்திய தொலைபேசி கட்டணம் | முற்பண வாடகை வருமானம் |
|---|---|
| 1.9400 | 2000 |
| 2. 9600 | 1000 |
| 3. 9600 | 3000 |
| 4. 10000 | 1000 |
| 5. 10000 | 2000 |

BUSINESS & COMMERCE BRANCH

05) பெறுமதி சேர்வரிக்கு பதியப்பட்ட சாமி வணிகத்தின் 31.03.2020 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல்கள் உமக்கு வழங்கப்படுள்ளது.

| | ரூபா. |
|---|---|
| கடன்விற்பனை (15% VAT உட்பட) | 287500 |
| கடன்கொள்வனவு (15% VAT உட்பட) | 92000 |
| காசு கொள்வனவு (15% VAT நீங்கலாக) | 150000 |
| உட்திரும்பல் (15% VAT உட்பட) | 11500 |
| வருடத்தில் செலுத்திய VAT | 10000 |

வணிகத்தின் சில சொத்துக்கள், பொறுப்பபுக்கள் கீழே உள்ளன.

| | 2019.04.01 | 2020.03.31 |
|---|---|---|
| கடன்பட்டோர் | 30000 | 40000 |
| கடன்கொடுத்தோர் | 15000 | 18000 |
| சரக்கிருப்பு | 10000 | 20000 |
| செலுத்தவேண்டிய VAT | 12000 | ? |

கிரயத்தில் 10% இலாபம் சேர்த்து பொருட்களை விற்பனை செய்வது வணிகத்தின் கொள்கை.

1. வுணிகத்தின் மொத்த இலாபம் யாது?
   1.ரூ.40000
   2. ரூ.41500
   3. ரூ64000
   4. ரூ.65500
   5. ரூ.77500

2. 31.03.2020 இல் VAT கட்டுப்பாட்டு கணக்கின் மீதி யாது?
   1.செலவு 2500
   2. செலவு 5500
   3. வரவு 6500
   4. வரவு 9000
   5. வரவு 10550

3. மேலுள்ள விற்பனை வருமானத்துக்கான இரட்டைப்பதிவினைக் குறிப்பிடுக. (விளம்பல் தேவையில்லை)

06) ரமணன் எழுதுபொருள் விற்பனை செய்யும் வணிகத்தை நடத்தி வருகிறார்.விற்பனை அல்லது திரும்பல் அடிப்படையில் அனுப்பப்பட்ட பொருட்களின் விற்பனை விலை ரூ.82 500. இப்பொருட்களின் திரும்பல் காலம் காலவதியாகவில்லை மற்றும் 31.03.2020 திகதிப்படி 1/4 பகுதி விற்கப்படாமல் உள்ளது. இந்நிறுவனம் விற்பனை விலையில் 10% இலாபத்தில் பொருட்களை விற்பனை செய்வதாகும். இவ்வணிகத்தின் மொத்த இலாபம் பின்வருமாறு.

| | | ரூபா. |
|---|---|---|
| விற்பனை | | 250 000 |
| ஆரம்ப இருப்பு | 12 000 | |
| கொள்வனவு | 185 000 | |
| (-) இறுதிஇருப்பு | ( 8 000) | (189 000) |
| மொத்த இலாபம் | | 61 000 |

BUSINESS & COMMERCE BRANCH

மேலே உள்ள சீராக்கத்தினை மேற்கொண்ட பின்

1. வணிகத்தின் விற்பனைப் பெறுமதி யாது?
2. இறுதி இருப்பின் பெறுமதி யாது?
3. மேலே உள்ள விற்பனை தொடர்பான இரட்டைப்பதிவு யாது?

07) சாமினி வணிகத்தின் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான தகவல் பின்வருமாறு.

| சொத்துக்கள் | 2019.04.01 ல் கிரயம் | திரண்ட பெறுமானத்தேய்வு | வருடத்தில் கொள்வனவு செய்தவை (திகதி மற்றும் பெறுமதி) | தேய்மானக்கொள்கை |
|---|---|---|---|---|
| நிலம் | 500 000 | - | - | - |
| கட்டடங்கள் | 200 000 | 50 000 | - | நேர்கோட்டு முறை 10% |
| மோட்டார் | 300 000 | 30 000 | - | ஒடுங்குபாக முறை 5% |
| இயந்திரம் | 100 000 | 20 000 | 2019.04.01 ல் ரூ. 50 000 | நேர்கோட்டு முறை 20% |
| கணிணிகள் | - | - | 2019.10.01 ல் ரூ. 80 000 | நேர்கோட்டு முறை 10% |
| தளபாடம் | 50 000 | 10 000 | 2020.10.01 ல் ரூ. 100 000 | நேர்கோட்டு முறை 10% |

1. 2020.03.31 ல் முடிவடையும் ஆண்டுக்கான ஆதனம் மற்றும் உபகரணங்களில் தேய்மானத்தை கணிப்பிடுக.
   கட்டடங்கள் -
   இயந்திரம் -
   மோட்டார் -
   கணிணிகள் -
   தளபாடம் -

2. சாமினி வணிகத்தின் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய நிதிநிலமை அறிக்கை தொடர்பில் வெற்றிடங்களை பூர்த்தி செய்க.
   ……………………………………… A
   ……………………………………… B

| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | கிரயம் | திரண்ட தேய்வு | தேறிய பெறுமதி |
|---|---|---|---|
| ஆதனம் பொறி உபகரணம் | | | |
| நிலம் | C | I | O |
| கட்டடங்கள் | D | J | P |
| மோட்டார் | E | K | Q |
| இயந்திரம் | F | L | R |
| தளபாடம் | G | M | S |
| கணிணிகள் | H | N | T |
| | | | U |

BUSINESS & COMMERCE BRANCH

08) பின்வரும் தகவல்கள் சித்து வணிகத்துடன் தொடர்புடையது. இது ஒரு தனியுடமையாகும்.

2021.03.31 ல் மொத்த சொத்துக்கள் ரூ.3485000
மொத்த பொறுப்பு ரூ.2135000
2020.04.01 ல் மொத்த உரிமையாண்மை ரூ.750000
2021.03.31 முடிவடையும் வருடத்தில் ரூ.150000 பற்றும், மேலதிக மூலதனமாக ரூ.300000 ஈடுபடுத்தப்பட்டது.

1. 2021.03.31 இல் முடிவடையும் ஆண்டுக்கான இலாபம்
2. 2021.03.31 இல் மொத்த உரிமையாண்மை

09) பாலா நிறுவனம் 2017.04.01 ம் அன்று ரூ.800 000 ஒரு இயந்திரத்தை வாங்கினான். அத்தினத்தில் அதன் பயனுள்ள ஆயட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி முறையே 6 ஆண்டுகள் மற்றும் ரூ.80000 என மதிப்பிடப்பட்டது. 01.04.2020 அன்று இந்த இயந்திரத்தின் விற்பனை விலை ரூ.600 000. இயந்திரத்தின் விற்பனை இலாபம்/நட்டம் என்ன?

10) பின்வரும் பிழைகள் காரணமாக வணிகத்தின் இலாபம் குறையுமா/அதிகரிக்குமா/மாறாமல் இருக்குமா என்பதைக் குறிப்பிடவும்.

1. உரிமையாளரால் பொருட்களைப் பற்றியது கொள்வனவு கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
2. முற்பண மின்சாரச் செலவை வருடத்திற்கான செலவாக பதிவு செய்தல்.
3. வாடகை வருமானம் புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.
4. செலுத்த வேண்டிய காப்புறுதி செலவு புத்தகங்களில் பதிவு செய்யப்படவில்லை.

BUSINESS & COMMERCE BRANCH